தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் ' எக்விப்டாக ' இருந் தால் தான் கேள்விகள் கேட்கும்போது மறுபடியும் நான் பதில் சொல்ல முடியும். ஆகையால் தான் இப்போது பதில் சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் ' எக்விப்டாக ' இருந்தால் தான் ரிப்போர்ட் வைக்கலாம். நீங்கள் தயாராக இல்லை என் றால் சீஃப்மினிஸ்டர் வந்து 'எக்ஸ்பிளைன் பண்ணட்டும். சபா நாயகர் அவர்களே, இந்த அவையை இப்படி ட்ரீட் பண்ணக் கூடாது ; நீங்கள்தான் அவைக்கு கஸ்டோடியன், அவை இந்த 31-ந் தேதியோடு கலையப்போகிறது. அதன் பிறகு எப்போது சொல்வார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 31-ந்தேதியோடு கலைந்து விடவில்லை. 31-ந்தேதி ஒத்திவைத்து, மீண்டும் 9-ந்தேதி கூடு கிறது. ஏறத்தாழ மே 15-ந்தேதி வரையில் அவை நடக்க இருக் கிறது. உங்களுக்குப் பதில் கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத் : நான் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஏற்கெனவே டிலே ஆகியிருக்கிறது. நம் முடைய சீஃப் மினிஸ்டர் இங்கே இருக்கிறார். அவர் விளக்கம் சொல்லட்டும். இந்த மாதம் 31-ந் தேதிக்குள்ளாவது பதில் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறு மாதத்திற்குள் ரிப்போர்ட் வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதை சட்டப்படி செய்திருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன். இருந் தாலும் விளக்கத்தைக் கேட்டு,அவைக்குச் சொல்லச்சொல்கிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இந்த அவையி லுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், அவைக்கு வெளியே இருக்கிற தமிழக மக்கள் அத்தனை பேர்களும் அதிர்ச்சியடை கின்ற வகையில் இலங்கையிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி பலர் ஒத்திவைப் புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமையை நீங்கள் பறிக்கக்கூடாது. நாளை மறுநாள் அந்த ஒத்திவைப்புத்தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது அப்போது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.

1984 மார்ச் 29]

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே; பெரும்பாலான உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூரில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்ளமுடியும். நீங்கள் முன்னிலைப் படுத்திக்கொண்டு, உங்களைப் பற்றிச் சொல்வது சரியல்ல. அவ்வாறு சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் கொடுத்திருக்கும் பொழுது, நீங்கள் 'நான் தான் முக்கியம்' என்று காட்டுவது சரியல்ல. இது எல்லோருடைய உரிமையையும் பாதிப்பதுபோல் ஆகும். இதை முன்மாதிரியாக செய்வது முறையல்ல.

(இ) விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணா விரதம் இருப்பது.

திரு. கு. ரமணி: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம்தான் விவசாயக் கல்லூரி மாணவர்கள் 2,000 பேர் உண்ணா விரதம் இருந்ததுபற்றிப் பேசினோம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அது பற்றி பேசினோம். அப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதமான பதிலைச் சொன்னார்கள். அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவோம் என்று பதில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு செய்தி மிகவும் மோசமாக வந்திருக்கிறது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அரை மணி நேரம் பேசியிருக்கிறீர்கள், கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்.

(முற்பகல் 10-00)

திரு. கு. ரமணி: இன்றைக்கு இரண்டு கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்டீர்கள். காங்கிரஸ் கட்சி கேட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி கேட்டார்கள். இப்படி எல்லோரும் கேட்டார்கள். (குறுக்கீடுகள்) அதைக் கேட்டுச் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி: நான் கட்சிகள் கேட்டதைச் சொல்லவில்லை. நேற்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதை அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்டுச் சொல்கிறேன்